ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்
அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை

தனி பிரதி Rs 15/-
ஆண்டு சந்தா Rs 180/-

பிப்ரவரி 2017
வேணு 22; கானம் 7



Delivered by India Post www.indiapost.gov.in

வைகுண்ட ஏகாதசி, மதுரபுரி ஆஸ்ரமம், 8 Jan 2017




# மதுரமுரளி

வேணு 22; கானம் 7

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

## பொருளடக்கம்


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-251 | 5 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஶ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 6 |
| ப்ரேமிக பவனம் உதயம் - 3 | 8 |
| நாமமே நமது குருவாகும்போது.... | 11 |
| உலகத்தின் கண்ணோட்டம் | 13 |
| கச்சியில் ஆனி கருட சேவை | 14 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 16 |
| கலிதர்ம உந்தியார் | 18 |
| மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை | 30 |
| பயத்தை வெல்வோம் | 32 |
| பாரம்பரிய பொக்கிஷங்கள் | 35 |
| சைதன்ய மஹாப்ரபு | 37 |
| படித்ததில் பிடித்தது | 41 |



# மதுரகீதம்

## தட்டுத் தடுமாறி

**ராகம்:** முகாரி

**தாளம்:** ஆதி

**பல்லவி**

**தட்டுத் தடுமாறி உன்கிட்டே வர பார்க்கும் என்னை**
**எட்டிப் பிடித்து, விடாமல் கட்டிக்கொள்வாயே!**


**அனுபல்லவி**

**அடம் பிடித்து உலகில் உழலும் என்னைபோல்**
**முட்டாள் ஒருவனை கண்டதுண்டோ கேட்டதுண்டோ!**

**சரணம்**

**இஷ்டம்போல் உலகில் நான் இருந்திடுவேன்**
**உன் நிஷ்டை என்றும் கைகூடவே கூடாது**
**கஷ்டம் வந்தால் உன்னை நிந்தித்திடுவேன்**
**நஷ்டம் எனக்குத்தான் என்று தெரிந்தும்கூட**
**விட்டல் விட்டல் என்றும் நான் உரைத்திட மாட்டேன்**

---




**முன் அட்டை:**

கல்பதரு தினம் மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை

**பின் அட்டை:**

மதுரபுரி ஆஸ்ரமம்

# மதுரமான மஹனீயர்

**Dr ஆ பாக்யநாதன்**
**ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அந்தரங்க செயலாளர்**

இந்த வருடம் வைகுண்ட ஏகாதசி ஜனவரி 8-ந் தேதி அன்று வந்தது. வைகுண்ட ஏகாதசி என்றால் எல்லோருக்கும் எப்பொழுதும் ஸ்ரீரங்கமும், ஸ்ரீரங்கநாதரும்தான் ஞாபகத்திற்கு வருவார்கள். அன்று, ஸ்ரீரங்கத்தில், பரமபதவாசல் திறப்பதால், பல ஊர்களில் இருந்தும் லட்சக்கணக்கில் பக்தர்கள் வந்து கூடுவார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜியும் வைகுண்டஏகாதசியை ஒட்டி எப்பொழுதும் ஸ்ரீரங்கத்தின் ஸ்மரணையாகவே இருப்பார்கள். இந்த வருடம் ஆஸ்ரமத்தில், வைகுண்டஏகாதசி அன்று அதிகாலையில் தனுர்மாத பூஜையுடன் பிரேமிகவரதன் திருமஞ்சனம் நடந்தது. சுமார் காலை எட்டு மணி அளவில், கருடவாஹனத்தில் ஸ்ரீ பிரேமிகவரதனுடைய புறப்பாடு நடந்தது. வந்திருந்த பக்தர்கள் அனைவரும் புறப்பாட்டுடன் நாமகீர்த்தனம் செய்துவர, ஸ்ரீபிரேமிகவரதனும் மாதுரீஸகியுடன் அதை ரசித்தபடி அசைந்து அசைந்து வந்தான்.

இந்த வருடம் வைகுண்டஏகாதசிக்கு முதல் நாள் இரவிலிருந்தே ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு வைகுந்தவிண்ணகரம் திவ்யதேசம் தியானமாகவே இருந்து வந்தது. சீர்காழி அருகில் திருநாங்கூர் திவ்யதேசங்களுள் ஒன்றான இந்த ஒரு திவ்யதேசத்தில்தான், பெருமாள் மூலவரும், உற்சவரும், ஸ்ரீவைகுண்டத்தில், பெருமாள் பரவாசுதேவனாக எப்படி எழுந்தருளியிருப்பாரோ அப்படியே எழுந்தருளியிருப்பார்கள். பகவான், இங்கு ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவியுடன் எழுந்தருளியுள்ளான். வைகுண்ட ஏகாதசி அன்று இந்த பெருமாளை சேவிக்கவேண்டும் என்ற ஆசையினால் ஆஸ்ரமத்தில் புறப்பாடு முடிந்தவுடன் ஸ்ரீ ஸ்வாமிஜி கிளம்பிவிட்டார்கள்.

மாலை ஏழு மணியளவில், திருநாங்கூர் பாடசாலை சென்று பிறகு அங்கிருந்து வைகுந்தவிண்ணகரம் சென்று பெருமாளை சேவித்தார்கள். அப்பொழுது ஸ்வாமிஜி அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அந்த திவ்யதேசத்தின் தடாகத்திற்கு விரஜா தீர்த்தம் என்று பெயர். அதில் வைகுண்ட ஏகாதசி அன்று ஸ்நானம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். ஆனால், அதில் நீர் இல்லை. பிறகு அங்கிருந்து செம்பொன்செய்கோயில் சென்று பெருமாளை சேவித்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அந்த கோவிலிற்கு வருவதற்கு முன்பாகவே நிறைய பக்தர்கள் அங்கு மஹாமந்திர கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார்கள். அங்கு தரிசனம் செய்தபிறகு, இரவு கோவிந்தபுரம் சென்று மறுநாள் ரோஹிணிக்காக சேங்கனூர் சென்றார்கள்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு
# ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

ஒரு இனிமையான ஆசீர்வதிக்கப்பட்ட மாலைப்பொழுதில், நமது மதுரபுரி ஆஸ்ரமத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், இனிமையான மனம் மயக்கும் குரலில் எல்லோரும் கேட்கும் வண்ணம் மஹாமந்திரக் கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார்கள். சில அன்பர்கள், அவர் அருகில் அமர்ந்து அவரது கீர்த்தனத்தை வாங்கிச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது, நெற்றி நிறைய திருநீறணிந்திருந்த ஒரு இளம் பக்தர், ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருகில் வந்து, "ஸ்வாமிஜி, இறைவனுக்கு எண்ணிலடங்காத பெயர்கள் உள்ளன. அவரது அவதாரங்களோ ஆயிரக்கணக்கில் உள்ளன. ஆனால், நீங்கள் ராமனையும் கிருஷ்ணனையும் மட்டுமே பாடுகிறீர்கள். ஏன் அப்படி?" என்று கேட்டார்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவரை தீர்க்கமாகப் பார்த்துவிட்டு, "என்னை வேறென்ன செய்யவேண்டும் என்கிறாய்?" என்று வினவினார். அந்த பக்தரோ, "நீங்கள் சிவனுடைய புனிதமான நாமத்தை ஜபிக்கலாமே" என்றார். ஸ்ரீ ஸ்வாமிஜி, "அதற்கென்ன?, நிச்சயமாகச் செய்கிறேன்", என்று கூறிவிட்டு, "சிவ சிவ சிவ" என்று ஜபிக்க ஆரம்பித்தார்.

இந்த உரையாடலை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த மற்றொருவர், எழுந்து ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருகில் வந்து, "ஸ்வாமிஜி, எனக்கும் ஒரு சந்தேகம், நான் இதிஹாச புராணங்களின் வாயிலாக கேள்விப்பட்டது என்ன என்றால், 'அஷ்டாக்ஷரி' மந்திரம்தான் மிக உயர்ந்தது என்பதாகும். நாம் ஏன் அந்த வைகுண்டநாதனின் நாமத்தை ஜபம் செய்யக்கூடாது?" என்று கேட்டார். உடனே ஸ்வாமிஜி, "ஓ, நிச்சயமாகச் செய்யலாமே", என்று "நாராயண, நாராயண, நாராயண" என்று ஜபிக்க ஆரம்பித்துவிட்டார்.

இதைக் கவனித்துக்கொண்டிருந்த மூன்றாமவரால், அதற்கு மேல் அமைதியாக அமர முடியவில்லை. அவர் எழுந்து, ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருகில் வந்தார். மிகவும் குழம்பிய முகத்துடன், "ஸ்வாமிஜி, அப்படி என்றால், தேவி உயர்ந்த தெய்வம் இல்லையா? தேவியின் நாமத்தை ஜபம் செய்யலாகாதா?" என்று கேட்டார். ஸ்ரீ ஸ்வாமிஜி, "ஏன் செய்யகூடாது?, இதோ," என்று கூறிவிட்டு, "சக்தி, சக்தி, சக்தி" என்று ஜபிக்க ஆராம்பித்தார்.

அவ்வளவுதான், மூவரின் குழப்பமும் எல்லையை கடந்தது. ஸ்ரீ ஸ்வாமிஜியை வணங்கிவிட்டு, "இதை எப்படி ஏற்றுக்கொள்வது ஸ்வாமிஜி? கடவுளுடைய பெயர் எப்படி ஒரு வடிவத்தையோ, மதத்தையோ

குறிக்கமுடியும்? அவர் எல்லாருக்கும் பொதுவல்லவா? நாம் நமது இஷ்டப்படி ஏதோ ஒரு நாமத்தை சொல்லலாமல்லவா?'' என்று கேட்டனர். ஸ்ரீ ஸ்வாமிஜி, ''நிச்சயமாகச் சொல்லலாமே. ஒவ்வொரு நாமமும் தனித்தன்மை வாய்ந்தது. அதற்குண்டான பலனை நிச்சயம் தர வல்லது'' என்றார்.

மேலும், ''எந்த நாமத்தை ஜபம் செய்தாலும் பொருத்தமே! ஆனால், எல்லோரும் இணைந்து சொல்வதற்கு ஒரு பொதுவான, வேதத்தால் பரிந்துரைக்கப்பட்ட நாமம் இருப்பது சிறந்ததல்லவா? மேலும், அது ராமன், கிருஷ்ணன் மட்டுமன்றி அவரவரின் இஷ்ட தெய்வத்தையும் மகிழ்விக்கும் என்றால், அதை விட சிறந்த நாமம் இருக்க முடியுமா?'' என்று கூறினர்.

மூவரையும் பார்த்து அழகான புன்னகை ஒளிரும் முகத்துடன் மேலும் தொடர்ந்தார், ''எனவேதான், நான் எந்தப் பகுப்பாய்வும் இன்றி, வேதம் பரிந்துரைக்கும் இந்த மஹாமந்திரத்தையே ஜபம் செய்கிறேன்'', என்றார். ஸ்ரீ ஸ்வாமிஜியின் குரல் தொடர்ந்து கம்பீரமாக மதுரபுரி முழுவதும் ஒலிக்க ஆரம்பித்தது, ''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே....ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே...'' என்று.


love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

# ப்ரேமிக பவனம் உதயம்

1992 ஆம் ஆண்டு August மாதம் ஒரு பொன்னான நாள். அன்று, தங்கள் வீட்டு மாடியிலேயே குருநாதர் வந்து தங்கும் பாக்யத்தைப் பெற்று பெரும் மகிழ்ச்சியை அடைந்தனர் ஜெயந்தியும் ஜானகிராமன் அவர்களும். பொழுது விடிந்து பொழுது போனால், குரு கைங்கர்யமே செய்து கொண்டு பேரின்பத்தை அடைந்தார் ஜெயந்தி. தன்னையும் தனது குடும்பத்தையும் முழுவதுமாக குரு சரணத்தில் ஒப்படைத்து, சரணாகதி செய்து, நிம்மதியாக சத்சங்கங்களை அனுபவித்து வந்தார் ஜெயந்தி. அலுவலகம் போய் வரும் நேரம் தவிர, மற்ற நேரமெல்லாம் கைங்கர்யத்திலேயே ஈடுபடுவார். அலுவலகத்திலும் குருநாதரைப் பற்றி

பேசி, தன்னுடன் வேலை பார்க்கும் பலரை குருநாதரிடம் அழைத்து வந்து விடுவார். குடும்பத்திற்கும் குழந்தைகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகளையும், வீட்டு வேலைகளையும் விட்டுக் கொடுக்காமல் செய்வார். பொறுப்பாக உத்யோகத்தையும் செவ்வனே செய்வார். இவ்வளவும் செய்து கொண்டே சத்சங்கம், பஜனை, கைங்கர்யம் என்று எப்பொழுதும் உற்சாகத்துடனும் சிரித்த முகத்துடன் இருந்து வந்ததற்கு காரணம், குருநாதரின் கிருபையும் ஜெயந்தி அவர்களின் குருபக்தியும் தான்.

குருநாதர் வந்து தங்க ஆரம்பித்ததுமே, ஒவ்வொருவராக பல பக்தர்கள் ஸ்வாமிஜியிடம் வந்து சேர்ந்தனர். சிறிது சிறிதாக, குருநாதரின் பக்த குடும்பம் வளர்ந்து கொண்டே வந்தது. ஓரிரு மாதங்கள் கழித்து, ஸ்ரீஸ்வாமிஜி மஹாபலிபுரத்திலிருந்து ஆசையாக வாங்கி வந்த ஸ்ரீநிவாஸ பெருமாளை, மாடியில் பிரதிஷ்டை செய்யலாம் என விரும்பினார். சிறு வயதிலிருந்தே குருநாதருக்கு ஸ்ரீநிவாஸ பெருமாளிடம் அளவு கடந்த பக்தி. மேலும், அவரே த்யான ஸ்வரூபமும் ஆவார். புரட்டாசி திருவோணம் அன்று, பிரதிஷ்டை செய்ய நிச்சயித்தார். முதல்நாள் இரவோடு இரவாக ஜெயந்தியும் ஜானகிராமன் அவர்களும், சித்தாள்-மேஸ்திரி போல், கலவையைக் கலந்து, பெருமாளை ஒரு மேடையில் நிற்க வைத்தனர். குறித்தபடி, பிரதிஷ்டை உற்சவமும் வேத கோஷத்துடனும் நாமகோஷத்துடனும் இனிதே நடந்தேறியது. இதன் பின்னர் அந்த க்ருஹம், தினந்தோறும் உத்சவ கோலத்துடன், ‘பிரேமிக பவனம்’ என்ற பெயருடன், ஹரியும் குருவும் வசிக்கும் கோவிலாக மாறியது.

பிறகு சில மாதங்களில், கும்பகோணத்திலிருந்து யுகளமாக ராதாகிருஷ்ணர் வந்தனர். ஸ்ரீஸ்வாமிஜியின் உயிரான அந்த யுகளம்தான், இன்று மதுரபுரியில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரத டாகுர்ஜியாக எழுந்தருளி இருக்கின்றனர். அவர்கள், பல வருடங்கள் பிரேமிக பவனத்தில்தான் கோவில் கொண்டிருந்தனர். யுகளம் வந்ததும் கோலாஹலம் இன்னும் அதிகமாயிற்று. புறப்பாடுகள், திவ்யநாமங்கள், உபன்யாசங்கள், நித்ய பூஜைகள், அஷ்டபதி பஜனைகள், ராதா கல்யாணங்கள் என்று எப்பொழுதும், ஆனந்தமாக சத்சங்கங்கள் நடந்த வண்ணம் இருந்தன. எல்லாவற்றிற்கும் ஈடு கொடுத்து, சளைக்காமல், கைங்கர்யங்கள், ததீயாராதனைகள் செய்து, பெருமாளுக்கு நிவேதனங்களும் செய்து வந்தார் ஜெயந்தி.

தனது பெண்ணை, அவளது விருப்பப்படியே, ஸத்சங்கத்திற்காகவும் குரு கைங்கர்யத்திற்காகவும், ஆன்மீக வாழ்க்கையை வாழ, குருநாதரிடமே சந்தோஷமாக ஒப்படைத்து விட்டனர். அதே போல், தனது பையனுக்கும் குருநாதரே தேர்ந்தெடுத்த ஒரு பெண்ணைப் பார்த்து நிச்சயித்தனர். ஸ்ரீவித்யா என்ற அந்தப் பெண்ணின் குடும்பமோ, ஸ்ரீஸ்வாமிஜியின் வெகுநாளைய பக்தர்கள். சத்சங்கங்களில் அடிக்கடி கலந்து கொள்வார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் நிச்சயித்தபடி அவ்விருவருக்கும் கல்யாணம் செய்து வைத்து, ஜெயந்தியும் ஜானகிராமனும், பொறுப்பை குருநாதரிடம் ஒப்படைத்து, நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். ஒரு சமயம் ஜெயந்தியின் கைங்கர்யத்தில் குருநாதர் சந்தோஷப்பட்டு, அவரிடம்- "ஜெயந்தி! உனக்கு என்ன வேண்டுமோ கேள்! நான் தருகிறேன்!" என்றார். அதற்கு ஜெயந்தி, "எனக்கு என்ன வேண்டும்? ஒன்றுமே வேண்டாம்! தங்கள் திருவடி நிழலில் இருந்துகொண்டே, இப்படி கைங்கர்யம் செய்து வர வேண்டும்!" என்றார். குருநாதரும் இதை கேட்டு மிகவும் மகிழ்ந்தார்.

ப்ரேமை தொடரும்...

ஏதிரொலி

இன்றளவிலும்கூட, கவிஞர்கள், பெண்களின் நடையை வர்ணிக்கும் போதெல்லாம் அன்னப்பறவையை ஒப்பிடுகிறார்கள். அன்னப்பறவை இனம் இவ்வுலகிலிருந்து அழிந்துபோய் பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. இப்போதைய கவிஞர்கள் யாரும் அன்னப்பறவையை பார்த்திருக்க வாய்ப்புகள் இல்லை. இருந்தபோதிலும், அவர்கள் எப்படி அப்படி வர்ணிக்கிறார்கள் என்றால், பண்டைய காலக் கவிஞர்கள் அன்னத்தை நேரில் கண்டு வர்ணித்த கவிதைகளை ஆதாரமாகக்கொண்டு அதன் தாக்கத்தினால், தற்போதும் அதே உவமையைப் பயன்படுத்துகிறார்கள். அதுபோலவே, நாம் பகவான் கிருஷ்ணனை வர்ணிக்கும்போது, ஏற்கனவே பகவானைப் பார்த்த மகான்கள் எப்படி வர்ணித்தார்களோ அதை ஒட்டியே நமது வர்ணனையும் அமைகிறது. எனவே, பகவானை நேரில் காணாமல், அவனது அன்பு பொங்கும் புன்முறுவல், தாமரைப்பாதங்கள் என்றெல்லாம் பாடல்களில் பாடுவது, முந்தைய பக்தர்களின் அனுபவத்தை நமது வார்த்தைகளால் சொல்வதுபோலாகும்.

~ ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி

# நாமமே நமது குருவாகும்போது....

## விக்னேஷ் சுந்தரராமன்

நமது வாழ்வின் நோக்கம் முழுமையான, எல்லையற்ற மிகவும் உயர்ந்த பிரம்மத்தை உணர்வதே ஆகும். மனிதப் பிறவி அமைவதன் காரணமே இந்தப் பிறப்பு இறப்புச் சூழலிலிருந்து ஒருவன் தன்னை விடுவித்துக்கொள்வதும் இறைவனை உணர்வதுமேயாம். இதில் நம்பிக்கை உள்ளவர்கள் முதலில் செய்யவேண்டியது என்னவெனில், அத்தகைய குறிக்கோளை அடைவதற்கு நம்மைச் சரியான பாதையில் செலுத்தி வழிகாட்டுவதற்கு ஒரு குருவைத் தேடுவதே ஆகும்.

மிகுந்த ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும், நாம் குருவை அணுகி அவர் ஏதாவது உபதேசம் செய்து நமது முடிவில்லாத சந்தேகங்களைப் போக்குவார் என்று எதிர்பார்க்கிறோம். மாறாக, குருநாதரோ "நாமம் சொல். அதுவே போதும். வேறு எதைப்பற்றியும் கலைப்படாதே" என்று சொல்கிறார். இதற்கு முன் நாம் ஒருபோதும் இவ்வாறு கேள்விப்பட்டதே இல்லை. முதலில் இவ்வளவு எளிமையான ஒரு வழியை நம்மால் ஜீரணிக்க முடிவதில்லை.

ஒன்றும் புரியாமல் மேலும் மேலும் கேள்விகள் எழுப்புகிறோம். வேதங்களால் சொல்லப்பட்ட எந்த சாதனைகளையும் கைக்கொள்ளாமல் நம்மால் எப்படி இறைவனை அடையமுடியும்? சாஸ்திரங்களையும், பிரம்மசூத்திரத்தையும் கற்றுத் தெளியாமல் ஆன்மீகப்பாதையில் எவ்வாறு முன்னேற முடியும்? என்று பல கேள்விகள்.

அவரோ மிகவும் பொறுமையாக, “நீ எதைப்பற்றியும் கவலைப்படாமல், நாம ஜபம் செய்து வா. ஒருவேளை நீ இயந்திரம் போல் ஜபம் செய்தாலும்கூடப் போதும். கையைத் தட்டிக்கொண்டு, சத்தமாக ஜெபம் செய்வாயாக”, என்று மீண்டும் கூறுகின்றார். வேறு வழியில்லாமல் நாமும் நாமம் சொல்லத் துவங்குகிறோம். சொல்லும் நாமத்தை எண்ணுவது, அல்லது குறிப்பிட்ட நேரம் வரை சொல்வது என்று நமது கவனம் செல்கிறது. ஒரு நிமிடம் கூட அதிகமாக சொல்வதில்லை. வேண்டுமானால் சில நிமிடங்கள் குறையலாம். கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு சொல்லியாகவேண்டுமே என்ற கட்டாயத்தில் சொல்கிறோம். சில மாதங்களுக்கு இயந்திரத்தனமாக நாம ஜபம் செய்து வருகையில், நம்மைச் சுற்றி நடக்கும் விஷயங்களின் முழுமையான அர்த்தத்தை மனம் கவனிக்கத் தொடங்குகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான ஒரு கலை நிகழ்ச்சியை நாம் காண நேரிட்டால், ஒரு சிறிய குழந்தை ஒரு பானையைத் தலையில் வைத்துக்கொண்டு மிக கவனத்துடன் நடனமாடுகிறாள் என்று வைத்துக்கொள்வோம். அவளுக்குக் கைகள் இல்லை. அவள் நடனமாடி முடித்ததும், பலத்த கரகோஷம் பெறுகிறாள். ஒருவர், ‘என்ன ஒரு முழுமையான நடனம், எத்தனை மனஉறுதி’ என்று ஆச்சரியப்படுகிறார். இன்னொருவர், ‘மாற்றுத்திறனாளியாக இருந்தால் என்ன? இவள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவள். கடவுள் அருள் எப்போதும் இவளுக்கு உண்டு’ என்கிறார். அந்த குழந்தை ஒரு மாற்றுத்திறனாளி என்பதால் ஒரு பரிதாபமும் கூடவே வியப்பும் எல்லோர் முகத்திலும் காணப்படுகின்றது. நமக்கும்தான். அங்கு பேசிக்கொண்டிருக்கும் அனைவரின் கூற்றையும் நமது மனம் ஆமோதிக்கிறது. அப்படியே, எதிர்பாராமல் உள்ளூர ஒரு எண்ணம் ஓடுகிறது, “நமக்கு மிக உறுதியான, குறைவில்லாத ஆரோக்கியமான உடல் கிடைத்துள்ளது. நம் கைகள் நன்றாக இயங்குகின்றன. கையைத் தட்டிக்கொண்டு நாமம் சொல்வதற்கு நம்மைத் தடுப்பது யார்?” என்று.

...தொடரும்

# உலகத்தின் கண்ணோட்டம்

**அஸ்வின் குமார்**

ஒரு பெரிய காட்டில் வெகு நாட்களாக மழை இல்லை. புல் தரைகள் வறண்டுவிட்டன. மரங்கள் வாட ஆரம்பித்தது. நீர்நிலைகளில் நீரின் இருப்பு குறைய ஆரம்பித்தது. இந்த நிலை இன்னும் சிறிது காலம் நீடித்தால் விலங்குகள் அனைத்தும் மடிய நேரும். இந்த சமயத்தில் காட்டு ராஜாவான சிங்கத்தின் தலைமையில் எல்லா விலங்குகளும் ஒரு கூட்டம் போட்டது. அப்பொழுது அதில் மழை இல்லாமல் போனதற்கு என்ன காரணமாக இருக்கும் என்று கலந்து ஆலோசனை செய்யும் விவாதம் துவங்கியது. அப்பொழுது நரி, ‘‘நம்மில் யாரோ பெரிய பாவம் செய்திருக்க வேண்டும். அதனால்தான் மழை இல்லை’’ என்று கூறியது. உடனே சிங்கம், ‘‘நான் காட்டில் தவம் செய்து வந்த ஒரு முனிவரைக் கொன்று சாப்பிட்டுவிட்டேன். அது பெரிய பாவமான செயல், அதனால்தான் மழை பெய்யவில்லை’’ என்றது. இதைக் கேட்ட நரி, ‘‘தாங்கள் காட்டின் ராஜா, தாங்கள் ஆரோக்யமாக இருந்தால்தான் நாங்கள் பாதுகாப்பாக இருக்க முடியும். மேலும், அந்த முனிவர் சிங்கம் கடித்துத்தான் தனக்கு மரணம் வேண்டும் என்று வரம் பெற்றிருப்பார். அதனால், தாங்கள் செய்தது பாவமே இல்லை’’ என்று கூறிவிட்டது.

அடுத்ததாக புலி, ‘‘நான் பஜனை செய்து கொண்டு வந்த பாகவதரை கொன்று சாப்பிட்டேன். அதுதான் மழை பெய்யவில்லை’’ என்றது. இதை கேட்ட நரி, ‘‘அந்த பாகவதருக்குப் புலியால்தான் மரணம் வரவேண்டும் என்ற சாபம் இருக்கும். மேலும், பஜனை செய்த பாகவதரை தாங்கள் தேடிச் செல்லவில்லை, அவர்தான் தங்களைத் தேடி வந்தார், உங்களுக்கு மனிதர்கள் இயற்கையாகவே உணவு. அதனால், இதில் தவறில்லை’’ என்றது. கரடி, ‘‘நான் சிவன் கோவிலுக்குப் பால் கொடுக்கும் பசுவைக் கொன்று விட்டேன், அதுதான் மழை இல்லை’’ என்றது. இதை கேட்ட நரி, ‘‘சிவபெருமான் அந்த பசுவிற்கு கைலாயம் கொடுப்பதற்குத் தங்களை ஒரு காரணமாக்கி கொண்டார், அவ்வளவுதான். இது பாவமில்லை’’ என்றது. இப்படியாக வலிமையான மிருகங்கள் பேசியதற்கு எல்லாம், அது பாவம் இல்லை என்பதற்கு தகுந்த காரணத்தை சாமர்த்தியமாகக் கற்பனை செய்து நரி சொல்லி வந்தது. கடைசியாக மான் சொன்னது, ‘‘முனிவர் தவம் செய்த குடிலுக்குப் பக்கத்தில் இருந்த புல்லை மேய்ந்தேன்’’ என்று, சொல்லி முடிப்பதற்குள், ‘‘நீ செய்ததுதான் மிகப் பெரிய பாவம்’’ என்று அதன்மேல் பாய்ந்து கொன்று தின்று விட்டது. வலிமையுள்ளவர்கள் தவறு செய்தாலும் ‘சரி’ என்று சொல்லும் உலகம் வலிமையில்லாதவர்கள் சரியானதைச் செய்தாலும் தவறு என்று சொல்லிவிடும்.



# கச்சியில் ஆனி கருட சேவை-7

**- ஸ்ரீ ராமானுஜம்**

நரசிம்மர் சன்னதி தாண்டி இடது வெளிப் பிரகாரத்தில் மெதுவாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள் ஸ்ரீஸ்வாமிஜி. சிறிது தூரம் சென்றவுடன் அங்கு சிறிது நின்றுவிட்டார்கள். மெதுவான தழுதழுத்த குரலில் அருகிலிருந்த எங்களுக்கு மட்டும் கேட்கும்படியாக அவர், ‘‘இந்த பிரகாரங்களில் ஒவ்வொரு கல்லும் எவ்வளவு கதைகளை சொல்லுகின்றன. இங்குதானே சற்று ஒதுங்கி நின்று ஸ்ரீ யாமுனாச்சார்யர், பகவத் ராமானுஜரை தன் கடைக்கண்களாலேயே கடாக்ஷித்தார்! எவ்வளவு முறை பகவத் ராமானுஜர் இங்கு நடந்து நடந்து பெருமாளுக்குத் தீர்த்த கைங்கரியங்களைச் செய்திருப்பார். இங்கு கோவில் கொண்டுள்ள பெருமாள்தானே பகவத் ராமானுஜர் உட்பட பல ஆச்சார்ய புருஷர்கள், மஹனீயர்களைத் தயார்ப்படுத்தி ஸ்ரீரங்கத்திற்கு அனுப்பி வைத்தார்’’ என்று சொல்லிக்கொண்டே இருந்தார்கள். ஒரு சில நிமிடங்களே அவருக்கு ஆச்சார்யர்களின் பிரபாவங்களையும் சரித்திரத்தையும் ஞாபகப்படுத்திவிட்டதைக் கண்கூடாகப் பார்த்தோம்!

அப்பொழுது நம் ஸ்வாமிஜியின் கண்கள் அந்தப் பிரகாரங்களை பார்த்து பனித்திருந்தன. அவர் தம் மனது எல்லாம் அந்த புனிதத் தரையிலேயே லயித்திருந்தது. அப்படியே அவர் கண்கள் மெல்ல மெல்ல இடம் பெயர்ந்து பிரகாரத்தின் கோடி வரை சென்று மறுபடி மெல்ல அமைதி தவழ திரும்பியதைப் பார்க்கையில், அவர் கண்களாலேயே மானசீகமாக ஒரு அங்கப்பிரதக்ஷணம் செய்வதை போலிருந்தது. தொடர்ந்து அவர் மெதுவாக நடக்கையில், அவரது அருள் மொழியாக, ஆச்சார்யர்களின் அரும் வைபவங்களைக் கேட்பதற்கான பாக்யம் கிடைத்தது.

ஸ்ரீ வரதராஜரின் சன்னதி வந்தடைந்தோம். அமெரிக்காவிலிருந்து வந்திருந்த குழந்தைகளிடமும் எங்களிடமும், ‘‘இங்கு எவ்வளவு படிகள் இருக்கிறது தெரியுமா?’’ என ஸ்ரீ ஸ்வாமிஜி கேட்டார்கள். அனைவரும் தெரியாது என தலையசைக்கவே, அவரே ‘‘இங்கு 24 படிகள் உள்ளன. யக்ஞத்திலிருந்து வந்த தேவப்பெருமாள் என்பதால் இந்த 24 படிகள், காயத்ரி மந்திரத்தின் 24 அக்ஷரங்களைக் குறிக்கின்றது. பகவான், 24 தத்துவங்களைத் தாண்டி இருக்கக்கூடிய தத்வம் என்பதாலும் 24 படிகள்’’ என்றார்.

அப்பொழுது சன்னதியில் கூட்டமே இல்லை. ஸ்ரீ ஸ்வாமிஜி மிக அருகிலேயே நின்று தேப்பெருமாளின் திவ்ய முக லாவண்யத்தையும் அவர்தம் புன்முறுவலையும் பார்த்து மிகவும் ஆனந்தமாக வெகுநேரம் அனுபவித்தவாறு இருந்தார். பிறகு சன்னதியிலிருந்து வந்து முன்னால் இருக்கும் மண்டபத்தில் எல்லோரும் உட்கார்ந்து கொண்டோம்.

அப்பொழுது பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அருளியதான தொண்டை மண்டல கீர்த்தனைகளை எல்லாம் அவர் பாட ஆரம்பித்தார். முதலில் பிலஹரி ராகத்தில், அஸ்தகிரி நிலயம் சரணம் வ்ரஜாமி என்ற கீர்த்தனையைப் பாடினார். அடுத்து வரதராஜமஹம் பஜாமி சதா என்று அருமையான கீர்த்தனையைத் தோடி ராகத்திலும், நாமாவளி போலவே அமைந்திருக்கும் "காஞ்சிபுராதி வாசா" என்ற கீர்த்தனையையும் ஆனந்தபைரவியில் பாடினார். தொடர்ந்து கரிராஜவரதம் என்ற வராளி ராகத்தில் உள்ள கீர்த்தனையையும், கமாஸ் ராகத்தில் 'ஏஹி வரதா தேஹி அபயம்' என்ற கீர்த்தனத்தையும் பாடினார்கள். என்ன ஒரு ஆச்சரியம் என்றால், கீர்த்தனங்களைப் பாடி முடிக்கிற வரையில் வரதராஜரின் தரிசனம் தடைபடாமலேயே இருந்தது. நல்ல தரிசனம் கிடைத்துக் கொண்டு இருந்தது. சேவார்த்திகள் யாரும் வரவில்லை. அருகில் இருந்த சில வைஷ்ணவர்களும் பட்டாச்சாரியார்களும் ரசிக்க, சிலர் வந்து உடன் அமர்ந்து வாங்கியும் கூட பாடினார்கள். முடிந்தபின், எல்லோரும் சந்தோஷமுடன் கீர்த்தனாவளி மண்டபத்திற்குத் திரும்பினோம்.

காஞ்சியைப் பிரிய வேண்டிய நேரம் வந்தது. காஞ்சியை பிரிந்தாலும் வரதராஜர் ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஹிருதயத்திலிருந்து விலகவில்லை. எங்களின் ஹிருதயங்களிலோ இப்படி இரு நாட்கள் ஸ்ரீஸ்வாமிஜியின் அருகிலிருந்து வரதரை தரிசிக்கும் பாக்யம் பெற்றது அகலவே இல்லை. அதே ஆனந்த உள்ளத்துடன் காஞ்சியை விட்டு பிரிந்து சென்னை வந்தடைந்தோம்.....வரதர் தரிசனம் இத்துடன் பூர்த்தி.

**ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத மொழிகள்**

ஸ்ரீ க்ருஷ்ணா! உனது நாமத்தை ரசித்து சொல்வதில்லை, பாக்யம் என்று நினைத்தும் சொல்வதில்லை, உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையிலும் சொல்வதில்லை, என்னுடைய பிரியனான உன்னுடைய நாமம் என்று காதலுடனும் சொல்வதில்லை. அதற்குப் பதிலாக, எத்தனை நாமங்கள் சொல்கின்றேன் என்ற கணக்கிலும், எவ்வளவு நேரம் சொல்கின்றேன் என்று நேரத்தைக் கணக்கிடுவதிலும், என்ன கிடைக்கும் என்பதிலும் என்னுடைய புத்தி செல்கின்றது. என்னுடைய இந்த பாவத்தைப் போக்கி உன்னுடைய நாமத்தை நான் ரசித்து சொல்லும்படியாக அருள்வாயாக.

# பாலகர்களுக்கு ஒரு கதை

ஒரு மனிதன் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தான். கோவிலுக்கு மிக அருகாமையில் வரும்போது எதிர்பாராமல் அவனது செருப்பு அறுந்துவிட்டது. அருகில் செருப்பு தைப்பவர் யாரும் இல்லாததால் என்ன செய்வது என யோசித்தான். கோவிலுக்கு வெளியே அப்படியே விட்டால், ‘அறுந்து போனது ஒரு குப்பை’ என யாராவது தள்ளி விட்டுவிட்டால் என்ன செய்வது என்று அவனுக்குத் தோன்றியது. யோசித்து, முடிவாக செருப்பைத் தன் பைக்குள்ளேயே வைத்துக்கொண்டான். அப்படியே கோயிலுக்குள் போனான். உள்ளே போனதிலிருந்து, கோயிலுக்குள் இப்படி செருப்பு கொண்டு வந்தது சரியா? தவறா? என அவனுக்குள் கேள்வி எழுந்து கொண்டே இருந்தது. அந்த கலங்கிய மனத்துடனேயே அவன் மூலவர் இருக்கும் கர்பக்ரஹம் அருகே வந்தான். அங்கிருந்த அர்ச்சகர், அவன் பையில் அர்ச்சனைக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருகிறான் என நினைத்து அதை நோக்கி தன் கைகளை நீட்டினார். உடனே, அவன் மிகவும் சங்கடத்திற்கு உள்ளானான். பையில் செருப்பு இருக்கிறது என்று எப்படி சொல்வது? செய்வது தவறு என்று தோன்ற, மௌனமாக அவன் தீர்த்தம் வாங்கிக் கொண்டு, பகவானை வலம் வந்தான். அப்படியே பிரசாதமும் கைகளில் வாங்கச் சென்றான். வாங்கிக் கொள்கையில் பையில் செருப்பு இருக்கிறது, இப்படியே வாங்குவது தவறல்லவா? என்று அவனுக்கு தோன்றியது.

கடைசியாக கொடிமரம் அருகே வந்தான். விழுந்து நமஸ்கரிக்கும் முன், பையை கீழே வைக்கப் போனான். மறுபடியும் அது சரியா? தவறா? என்று அவனுக்குள் கேள்வி எழுந்தது. அவனால் எதையும் முடிவு செய்ய முடியவில்லை. அதனால் அரையும் குறையுமாக கைகளில் பையை வைத்துக்கொண்டே நமஸ்கரித்து விட்டு வெளியில் வந்தான்.

வெளியில் வந்த அவனுக்குள் கோயிலுக்குச் சென்று வந்த திருப்தியே இல்லை. தன் பையைப் பார்க்க அவனுக்கு வெறுப்பாக இருந்தது. அதனால்தான் தன்னால் ஒழுங்காக பகவானைத் தரிசனம் செய்ய முடியவில்லை என்பதையும் அவன் உணர்ந்தான். நிம்மதி அடையாமல் தவித்துக் கொண்டிருந்தான். இது அவனுக்கு மட்டுமல்ல... நமது வாழ்வுக்கும் பொருந்தும்.

நாம் நம் வாழ்வில் நடந்த தேவையற்ற பழைய குப்பைகளை எல்லாம் ஞாபகம் வைத்துக் கொள்வதால் துக்கம் அடைகிறோம். அது நமக்கு மன உளைச்சலைத் தந்து, மன அமைதியைக் கெடுத்துவிடுகிறது. அந்த மனிதன் கோயிலுக்குள், தூக்கிச் செல்லும் செருப்பைப் போல்தான் இது. செருப்பை வெளியிலேயே வைத்திருந்தால், அவன் நன்கு மனதை ஈடுபடுத்தி, பகவானைத் தரிசனம் செய்திருப்பான். அதுபோல, நாமும் இந்த புது வருடத்தில் வேண்டாதவற்றை எல்லாம் மறந்து, புதிதாக நற்சிந்தனைகளுடன் காலடி எடுத்து வைப்போமானால், நமக்கு உற்சாகமும் நம்பிக்கையும் பிறந்து, வாழ்க்கை செழிப்பாக மலரும். அமைதி நம் மனதில் குடி கொள்ளும். அதனால் நம்மால் பகவானை நன்றாக ஆராதிக்க முடியும். சரிதானே?




# கலிதர்ம உந்தியார்

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில், சென்னை, நாரத கான சபாவில் GOD India Trust சார்பில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் தொடர் உபன்யாசம் பொங்கல் தினத்தை ஒட்டி ஏற்பாடு செய்து நடைபெறுவது வழக்கம். இதில், உலகெங்கிலும் எண்ணற்ற பக்தர்கள் வந்திருந்து ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் உபன்யாசத்தை ஸ்ரவணம் செய்து ஆனந்திப்பது வழக்கம்.

இந்த முறை, ஜனவரி 7-ந் தேதி முதல் 15-ந் தேதி வரை ஒன்பது நாட்கள், சென்னை நாரத கானசபாவில், நமது குருநாதர் அருளியுள்ள, நாம மஹிமை நிலை நாட்டும்விதமாகவும், வரும் காலங்களுக்கு எல்லோருக்கும் ஒரு வழிகாட்டியாகவும் இருக்கும் “கலி தர்ம உந்தியாருக்கு” ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அந்தரங்க செயலாளர் ஸ்ரீ பாக்யநாதன்ஜி, நேரில் கேட்டவர்களால் மறக்க முடியாத எல்லோர் மனதிலும் பதியும் வண்ணம் ஒரு அழகான தொடர் உபன்யாசத்தை வழங்கினார்கள். இது வரை எத்தனையோ சத்சங்க நிகழ்ச்சிகள் நடைபெற்றிருந்தாலும் இந்த சத்சங்கம் ஒரு தனித்துவம் வாய்ந்தது என்று இதில் கலந்துகொண்டு அனுபவித்த ஒவ்வொருவராலும் சொல்லப்பட்டது.

ஏனென்றால், முதன்முறையாக, நம் ஸ்வாமிஜி அவர்களின் அருளிச் செயலான இந்த கலிதர்ம உந்தியாரை ஸ்ரீ ஸ்வாமிஜியின் அந்தரங்க செயலாளர் பாக்யாஜி, அந்த ரங்கத்தில் (நாரத கான சபாவில்) எல்லோர் மனதையும் கவரும்படி மிக அழகாகவும் ரஸமாகவும் பகிர்ந்துகொண்டார்.

முப்பத்து ஒன்று பாடல்கள் கொண்ட இந்த கலிதர்ம உந்தியாரின் ஒவ்வொரு எழுத்திற்கும், சொல்லிற்கும் பாக்யாஜி, இதிஹாசம், புராணங்கள், ஸ்ரீமத் பாகவதம், பகவத்கீதை, பக்தவிஜயம் இவற்றிலிருந்து தொடர்பை எடுத்து கூறிய விதமும், எண்ணற்ற மஹான்களினுடைய திவ்ய சரித்திரங்களிலிருந்தும், அவர்கள் உபதேசங்களிலிருந்தும், சாரமான விஷயங்களை, கலிதர்ம உந்தியாரின் ஒவ்வொரு பாடல்களிலும் சம்பந்தப்படுத்தி, ஒரு சிறு குழந்தைக்கும் புரியும் வண்ணம் காண்பித்த பாங்கும் மிக நேர்த்தியாக அமைந்தது.

எல்லாவற்றையும்விட மேலாக, நொடிக்கு நொடி, நம்ஸ்வாமிஜி அவர்களின் உபதேசங்களையும், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பற்றிய மதுரஸ்மரணங்களையும், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் குணங்களைப் பற்றியும், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கருணையுடன், நாம் உய்ய, நமக்கு வழி காட்டும் பொருட்டு, நம்மிடையே கலந்துபழகி கற்றுத்தரும் முறைகளையும், தேனினும் இனிய ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளியுள்ள

மதுரகீதங்களையும், கலியையும் பலி கொள்ளும்... எனத் துவங்கும் மஹா மந்திர கீர்த்தனத்தையும், கலிதர்ம உந்தியாருடன் சேர்த்து சேர்த்து காண்பித்து பாக்யாஜி தனக்கே உரிய பாணியில் உத்வேகத்துடனும், உத்ஸாஹத்துடனும் கம்பீரமாக பேசியது எல்லோர் மனதையும் ஆழ்ந்து தொட்டுவிட்டது என்றால் அது மிகையாகாது. ஒன்பது நாட்களும், இரண்டு மணி நேரமும், மடை திறந்த வெள்ளம் போல், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களைப் பற்றிய விஷயங்களை பாக்யாஜி கொட்டித்தள்ள, ஒவ்வொருவரும் ஆடாமல், அசையாமல் அதே சமயம் மிகவும் ரசித்துக் கொண்டே இருந்தது மிகவும் வியப்பாக இருந்தது.

பல ஊர்களிலிருந்து ஸத்ஸங்க அன்பர்கள், இந்த 9 நாட்கள் நடைபெற்ற சத்சங்கத்தில் கலந்துகொண்டார்கள். இதில், திருவண்ணாமலை பகவான் யோகி ராம்சுரத்குமார் அவர்களின் ஆன்மீக வாரிசு நீதியரசர் ஸ்ரீ T.S.அருணாசலம் அவர்கள் மற்றும் மதிப்பிற்குரிய Dr. ஸ்ரீ கண்ணன் IAS அவர்கள் கலந்துகொண்டார்கள்.

பாக்யாஜி சொன்ன விஷயங்களை அனைவரும் கண்களில் கண்ணீர் மல்க கேட்டது மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது. பூர்த்தி தினத்தன்று, ஸ்ரீ பம்மல் பாலாஜி, பாக்யாஜிக்கு பரிவட்டம் கட்டி ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் பிரசாதங்களை அளித்து பேசும்பொழுது, மரக்கட்டை, கல், கரையும் பொருள், பஞ்சு என்று நான்கு விதமானவர்களைப் பற்றி சொன்னார்கள். மரக்கட்டையை தண்ணீரில் போட்டால் அது மிதக்கும். ஆனால், அதற்கு அதன் ஆழம் தெரியாது. நீரில் கல்லைப்போட்டால் அது மூழ்கிவிடும். ஆனால், கல்லிற்குள் நீர் செல்வதில்லை. கரையும் பொருட்கள் நீரில் கரைந்து இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுகிறது. ஆனால், பஞ்சு ஒன்று தான், நீரை உறிஞ்சி தனக்குள் இழுத்து வைத்துக்கொள்ளும். அதை பிழிந்தால், எல்லோர் மீதும் தெளிக்கும்.

அதுபோல் குருநாதர் என்னும் கருணைக்கடலில் சிலர், மரக்கட்டைபோல் மிதப்பர். சிலர், கல் போன்று மூழ்கிவிடுகின்றனர். அவர்களுக்குள் நீர் செல்வதில்லை. சிலர், குருவின் கருணையில் கரைந்து காணாமல் போகின்றனர். குருநாதர் அருளிய கலிதர்ம உந்தியாரை நம் எல்லோருக்கும் சொல்ல வந்திருக்கும் நம் பாக்யாஜியோ, பஞ்சுபோல் குருநாதர் என்னும் நீரை உறிஞ்சி பிறகு பிழியும்போது நம் மீது மழைபோல் வர்ஷித்துவிட்டார் என்று முத்தாய்பாக பேசி முடித்தார்.

எல்லோர் மனதிலும் ஓடிக்கொண்டிருந்த எண்ண ஓட்டங்களை வெளிக்கொணர்ந்துவிட்டார் என்று எல்லோருக்கும் ஒரே உள்ள பூரிப்பு. ஒவ்வொரு நாளும் உபன்யாசம் முன்பாக, ஒவ்வொரு கோபகுடீர குழுவினரின் கலிதர்ம உந்தியார் பாடியது இனிமையாக இருந்தது. இது ஒரு உத்ஸவம்போல் அமைந்திருந்தது என்றால் அது மிகையாகாது.

# கல்பதரு தினம் மஹாமந்திரக் கூட்டுப்பிரார்த்தனை

2007ஆம் ஆண்டு முதல் GOD INDIA TRUST சார்பில், ஒவ்வொரு வருடமும், ஜனவரி 1 - கல்பதரு தினத்தன்று - மஹாமந்திரக் கூட்டுப்பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெறுவதுபோல், இவ்வருடம், சென்னை அருகில் குன்றத்தூர் பகுதியில் கலெட்டிப்பேட்டை கிராமம் அம்பேத்கார் மைதானத்தில், கலெட்டிப்பேட்டை மற்றும் ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் அன்பர்களால் மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது. நாமத்வார் அன்பர்கள் மதுரகீதத்தை இனிமையாக பாட, ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் அந்தரங்க செயலாளர் பாக்யநாதன்ஜி வரவேற்புரை வழங்கி வைபவத்தை தொகுத்து வழங்கினார். நாம அனுபவங்களை பக்தர்கள் பகிர்ந்துகொண்டனர்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மஹாமந்திரத்தினால் நினைத்தது நடக்கும், கேட்டது கிடைக்கும் என்று நாம வைபவத்தை நிலைநாட்டி அருளுரை வழங்கினார்கள். எல்லோரும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுடன் மஹாமந்திரகீர்த்தனம் பாடினர். உலகெங்கிலும் பல நாடுகளிலிருந்து சுமார் 7000 அன்பர்கள் வந்திருந்தனர். ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார் திரு. சுந்தர் நன்றியுரையை நவின்றார்.

# மார்கழி மாத நகர சங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் GOD INDIA TRUST சார்ந்த நாமத்வார்களில் ஒவ்வொரு வருடமும் மார்கழி மாத மஹாமந்திர நகர சங்கீர்த்தனம் நடைபெறுவதுபோல் இவ்வருடமும் தூத்துக்குடி, சிவகாசி, விருதுநகர், கோவில்பட்டி, திருச்சி, சேலம், மதுரை, அம்பாசமுத்திரம், வத்தலகுண்டு, கடலூர், சிதம்பரம், ஸ்ரீ பெரும்பதூர், அண்ணா நகர் மற்றும் பம்மல் நாமத்வார்களிலும் மைலாபூர், மாம்பாக்கம், கண்ணதாசன் நகர், திருத்துறைப்பூண்டி, திருத்தணி, ஆம்பூர், குடியாத்தம், மங்களூர், சிங்கபெருமாள் கோயில், உடுமலை, வாலாஜாப்பேட்டை, இராணிப்பேட்டை, கொடுங்கையூர், குரோம்பேட்டை, மஹாண்யம், பெரும்பாக்கம், பட்டினப்பாக்கம், அம்பத்தூர், கோவூர், தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் மிகவும் சிறப்பாக சத்சங்க அன்பர்களுடன் பொது மக்களும் நாம நகர சங்கீர்த்தனம் செய்து குருவருளுக்கும் திருவருளுக்கும் பாத்திரர்களாகினர்.

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

**ஸ்ரீ ஹனுமத் ஜயந்தி , மதுரபுரி ஆஸ்ரமம், 29 Dec 2016**





**ஸ்ரீ இராமானுஜரின் 1000வது ஆண்டு அவதாரதினம்,**
**ஸ்வாமி விவேகானந்தா வித்யா பீடம், ஸ்ரீபெரும்பத்தூர், 6 Jan 2017**








**ஜனவரி 7, ‘மதுரகீதம்’ - இறுதிப் போட்டி. இடம்: நாரத கான சபா, ஆழ்வார்பேட்டை, சென்னை. வித்யா வாணி சங்கீத வித்யாலயா - முதலிடம், சாய் க்ருபா பஜன் மண்டலி - இரண்டாமிடம் பெற்றனர். ஸ்ரீமதி கிருத்திகா பரத்வாஜ் மற்றும் ஸ்ரீமதி பவானி ஸ்ரீகாந்த் நடுவர்களாக இருந்தனர். வெற்றி பெற்றவர்களுக்கு ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார்.**




























**ஜனவரி 7 முதல் 15 வரை, மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் 'கலிதர்ம உந்தியார்' - உபந்யாசம், Dr.ஆ.பாக்யநாதன்ஜி, நாரத கான சபா, சென்னை.**

## <u>ஸ்ரீ ராமானுஜம்ஜியின் சத்சங்கங்கள்</u> (25 Dec 2016 - 18 Jan 2017)

**Workshops: Building Inner Strength Youth Workshop - California, Empathy A Building Block to Inclusiveness at Berkeley Labs - California, The Inner Voice of Harmony - Atlanta**

**உபந்யாசங்கள்: மதுர உற்சவம் - Houston, கல்பதரு தினம் - மஹாமந்திரக் கூட்டுப் பிரார்த்தனை, பக்தியோக சொற்பொழிவு - Atlanta, மஹாமந்திரக் கூட்டுப் பிரார்த்தனை - California**

**ஸ்ரீ ஸ்வாமிஜியின் சம்பூர்ண மதுரகீத மகாயக்ஞமும் நடைபெற்றது**



மதுர உற்சவம் - Houston




பக்தியோக சொற்பொழிவு - Atlanta



Empathy A Building Block to Inclusiveness at Berkeley Labs - California




மாணவ மாணவியருக்கான மாபெரும் கூட்டு பிரார்த்தனை,
ஸ்ரீ பாக்யநாதன்ஜி - ஸ்ரீ ராமானுஜம்ஜி,
சென்னை காமராஜர் அரங்கம், 21 Jan 2017

**GOD India Trust நாமாம்ருதம் என்ற நடன நிகழ்ச்சியை சென்னையில் 22 Jan 2017 அன்று நடத்தியது. இந்த நடன நிகழ்ச்சி ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் மதுரகீதங்களிலிருந்து, பகவந்நாமத்தை போற்றும் கீர்த்தனங்களை வைத்து வடிவமைக்கப்பட்டது. கோப குடீரம் மற்றும் நாட்யசமர்பணம் நடன பள்ளியை சேர்ந்த குழந்தைகள் மிக அழகாக நடனம் செய்து காண்பவர் உள்ளங்களை கொள்ளை கொண்டனர்.**










பள்ளிகளில் பம்மல் ஸ்ரீ பாலாஜி அவர்களின் மஹாமந்திரக் கூட்டுப் பிரார்த்தனை



'பொன்னார் மேனியனுடன்' - ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளுடனான அனுபவ தொகுப்பு - புத்தக வெளியீட்டு விழா, 7 Jan 2017



ஸ்ரீ பூர்ணிமாஜி, குமாரி காயத்ரி, குமாரி ப்ரியங்கா - ஸ்ரீமத் பாகவதம் உபன்யாசம், மும்பை, 6-12 Jan 2017






மாணவ மாணவியருக்கான கூட்டு பிரார்த்தனை, பெங்களூரு, ஸ்ரீ குருமூர்த்தி - ஸ்ரீ அபிஷேக், 17 Jan 2017



ஸ்ரீ ராமஸ்வாமி அவர்களின் ஸ்ரீமத் பாகவதம் உபந்யாசம், 22-28 Jan 2017 கோட்டயம்



குமாரி காயத்ரி, குமாரி பிரியங்கா ஸ்ரீமத் பாகவதம் உபந்யாசம், 16-22 Jan 2017, அண்ணா நகர், சென்னை



குமாரி ஸ்ரீ கன்யா, குமாரி ஷிவ் கன்யா, ஸ்ரீமத் பாகவத உபந்யாசம், 16-22 Jan 2017, தஞ்சாவூர்

ஸ்ரீ விஷ்ணுப்ரியா

## மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

# அக்ஷ

புண்டரீகாக்ஷன், அரவிந்தாக்ஷன், கமலாயதாக்ஷன், ராஜீவாக்ஷன் என்ற பகவானுடைய பெயர்கள் மிகவும் ப்ரஸித்தம். "தாமரை போன்ற கண்கள் உடையவன்" என்று தான் எல்லாவற்றிற்கும் அர்த்தம். இதில் ‘அக்ஷ’ என்றால் கண்கள் என்று அர்த்தம். அதனால்தான் தஸமஸ்கந்தத்தில், வேணு கீதத்தில் கோபிகைகள கண்ணன் குழல் ஊதும் அழகை கூறும் பொழுது - ‘அக்ஷண்வதாம் பலமிதம் ந பரம் விதாம:’ - என்று கூறுகின்றனர். அதாவது, "கண் படைத்தவர்களுக்கு குழலூதும் கண்ணனின் கடாக்ஷத்துடன் கூடிய திருமுக மண்டலத்தை பருகுவதைக் காட்டிலும் மேலான பலன் ஒன்றை நாம் அறிகிலோம்", என்கிறார்கள். ‘கடாக்ஷம்’ என்று சொன்னோமல்லவா? ஆம் ‘கடாக்ஷம்’ என்ற சொல்லும் ‘அக்ஷ’ என்பதிலிருந்து ஏற்பட்டுள்ளது. ‘கடாக்ஷம்’ என்றால் என்ன? ‘ஓரக் கண் பார்வை’ என்று அர்த்தம். ‘கலய கடாக்ஷம்’ என்றெல்லாம் பல கீர்த்தனங்களில் பகவானுடைய இந்த கடாக்ஷத்திற்காக நாம் ப்ரார்த்திக்கிறோமல்லவா? ஏனென்றால் பகவானுடைய கடாக்ஷம் என்பது அவ்வளவு விசேஷமானது. நேர் பார்வை வரை போக வேண்டாம், கடாக்ஷம் கிடைத்தாலே நாம் தன்யமாகிவிடுவோம். ‘விழியோர படகில் எனக்கிடம் கிடைக்குமா?’ என்று குருநாதரை பார்த்தும் பாடுகிறோம். வாஸ்தவத்தில் நேர் பார்வையை நம்மால் தாங்க முடியாது. குரு, தெய்வம், ராஜா இம்மூன்று


பேர்களுடையவும் நேர் பார்வை படும்படி நாம் நிற்க கூடாது என்று பெரியோர்கள் கூறுவார்கள். ஏனென்றால், அந்த நேர் பார்வையின் வீர்யத்தை தாங்கும் சக்தி நம்மிடம் கிடையாது. அதனால் தான் கடாக்ஷத்தையே ப்ரார்த்திக்கிறோம். மேலும், கடாக்ஷத்தில், அன்பின் மிகுதி வெளிப்படுவதாலும் கடாக்ஷம் விசேஷமானது.

ஒவ்வொரு இந்த்ரியத்திற்குமே ஸம்ஸ்க்ருதத்தில் 'அக்ஷ' என்று பெயர். அதனால் 'ப்ரத்யக்ஷம்' என்றால் 'அக்ஷம் ப்ரதி', அதாவது ஒவ்வொரு இந்த்ரியத்திற்கும் நேராக புலப்படுவது என்று பொருள். பகவான் ப்ரத்யக்ஷம் என்றால் நேரில் பகவானை பார்த்தவர்கள் என்று அர்த்தம்.

'அக்ஷ' என்ற இந்த சொல்லிற்கு வேறு அர்த்தம் உண்டா? என்றால் உண்டு. 'அக்ஷ கேளி' என்றால் பகடையாட்டம் (DICE-GAME) என்று பொருள். இங்கு 'அக்ஷ' என்ற சொல்லிற்கு பகடை (DICE) என்று பொருள். நாம் பகவானுக்கு விஶ்ரமணம் செய்யும் பொழுது கண்ணன் ராதையுடன் நிகுஞ்ஜத்தில் பகடை விளையாட்டு விளையாடுவதை அனுகரணம் செய்கிறோமல்லவா? அதை பாடும் பொழுது, 'அக்ஷலீலயா கமலாக்ஷ:' என்று பாடுகிறோமே! 'அக்ஷலீலயா' என்றால் பகடை உருட்டி விளையாடுவது என்று அர்த்தம். ஸ்ரீமத் பாகவதத்திலும், அனிருத்தன் - உஷா விவாஹத்தின் பொழுது, ருக்மியை மற்ற அரசர்கள், பலராமரை பகடையாட்டம் ஆடி ஜெயிக்க சொல்லி தூண்டுகிறார்கள் "பலம் அக்ஷை: வினிர்ஜய" என்று. புத்தி கெட்ட ருக்மியும் அவர்கள் பேச்சை கேட்டு, பலராமரை அழைத்து விளையாடும்பொழுது அவரை ஏமாற்றி கேலி பேச்சு பேசுகிறான். அஸரீரி வாக்கு ருக்மி ஏமாற்றுகிறான் என்று சாக்ஷி கூறியது. அதையும் பொருட் படுத்தாமல் ருக்மி பலராமரை ஏளனம் செய்ய, அந்த அரசபையில் எல்லோர் முன்பும் கோபம் கொண்ட பலராமர் ருக்மியை வதம் செய்து விடுகிறார் என்கிறது பாகவதம்.

'அக்ஷமாலா' என்று ஜபமாலைக்கு பெயர். ருத்ராக்ஷ மாலை என்றெல்லாம் சொல்கிறோம். இங்கு ஒரு விதமான விதைக்கு அக்ஷ என்று பெயர். அதனால் செய்யப்படுவதால் அக்ஷமாலா என்கிறோம்.

சரி, கடைசியாக மற்றொரு அர்த்தமும் பார்த்து விடுவோம். ஒரு வண்டி அல்லது தேரின் அச்சிற்கும் 'அக்ஷ' என்று பெயர். பாகவதத்தில் ஸூரியனின் கதியை சொல்லும் பஞ்சம ஸ்கந்தத்தில், சூர்ய ரதம் வர்ணிக்கப்பட்டுள்ளது. ஸூர்ய ரதத்தின் ஒரு அச்சானது மஹாமேரு என்ற மலையின் உச்சியில் மாட்டப்பட்டுள்ளது என்கிறது பாகவதம் — 'தஸ்ய அக்ஷ: மேரார் மூர்தனி க்ருத:' என்கிறது. அதன் மற்றொரு பாகம் மானஸோத்தர மலையில் மாட்டப்பட்டதாக சூரிய ரதமானது மானஸோத்தர பர்வதத்தில் சுற்றி வருகிறது. 'அக்ஷ' என்றால் axis (சுழற்சி அச்சு). axis என்ற ஆங்கில வார்த்தை கூட 'அக்ஷ' என்பதிலிருந்து ஏற்பட்டிருக்கலாம்.



# பயத்தை வெல்வோம்

**பயமோ, கவலைகளோ, உங்களை அலைக்கழிப்பது எதுவாயினும் அதிலிருந்து மீண்டு உங்கள் அன்றாட வாழ்வை எளிதாக்க பல எளிமையான உத்திகளும், வழிமுறைகளும் உள்ளன.**

## சிறிது நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்

நீங்கள் பயம் அல்லது கவலை வெள்ளத்தில் மூழ்கியிருக்கும்போது, எதையும் தெளிவாக யோசிக்க இயலாது. முதலில் செய்ய வேண்டியதெல்லாம், மனதிற்கு அமைதி கொடுப்பது. ஒரு பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு சிறிய நடை பயிற்சியோ, ஒரு சிறிய தேநீர் இடைவெளியோ அல்லது முடிந்தால் ஒரு குளியலோ எடுத்துக்கொள்ளலாம்.

## பயத்தை அனுபவித்து சுவாசித்தல்

உங்களுக்கு திடீரென வேகமான இதயத்துடிப்பு ஏற்பட்டாலோ, மற்றும் உள்ளங்கைகள் வியர்க்க ஆரம்பித்தால், அதை எதிர்த்துப் போராட வேண்டாம். ஒரு நீண்ட மூச்சு விட்டுக்கொண்டு அதை அனுபவித்தல் நல்லது. உள்ளங்கைகளை வயிற்றின் மீது வைத்துக்கொண்டு மிக மெதுவாக ஆழமாக சுவாசிக்க வேண்டும். பயத்தை அனுபவிக்க மனதைத் தயார் செய்வது அவசியம். அப்படிச் செய்தால் மனமானது அதிலிருந்து சுலபமாக விடுபடும். மன அழுத்தம் ஏற்பட்டாலும் இதை முயற்சி செய்யலாம்.

## அச்சத்தை எதிர்கொள்ளுங்கள்

அச்சத்தை தவிர்க்க முயற்சித்தால் அது இன்னும் அதிகமாக அச்சுறுத்தும். மாறாக அச்சத்தை எதிர்கொள்ளத் துவங்கினாலோ, அது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பிக்கும். உதாரணத்திற்கு, நீங்கள் ஒரு நாள் மின்தூக்கியில் (lift) மாட்டிக்கொண்டால், மறுநாள், அதைத் தவிர்க்காமல், அதே மின்தூக்கியில் செல்வது நல்லது.

## ஆதாரத்தை ஆராய்வது

நமக்கு நேர்ந்ததைப் போன்ற விஷயத்தை ஏற்கனவே கேள்விப்பட்டிருப்பின், அதைப்பற்றி யோசிப்பது, உடனடியாக அச்சத்திலிருந்து உங்களை மீட்கும். உதாரணத்திற்கு, மின்தூக்கியில் தனியாக மாட்டிக்கொண்டால், பயம் மற்றும் மூச்சுத்திணறலிலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ள, அதே சம்பவம் உங்கள் நெருங்கியவர்களுக்கு இதற்கு முன் ஏற்பட்டிருந்தால், அதை நினைவு கூர்ந்து, அவர்கள் அதிலிருந்து விடுபட்ட முறையைப் பின்பற்றலாம். அல்லது, அந்த மாதிரி நேரங்களில் உங்கள் நண்பருக்கு நீங்கள் என்ன ஆலோசனை சொல்வீர்கள் என்று யோசித்து அதையே நீங்களும் பின்பற்றலாம்.

## எப்போதும் மிகச்சரியாக இருக்க முயற்சிக்க வேண்டாம்

மனித வாழ்க்கையில் மன அழுத்தங்கள் ஏற்படுவது சகஜம்தான். எப்போதும் வாழ்க்கை மிகச் சீராக இருக்கும் என்று எதிர்பார்க்கவேண்டாம். கெட்ட நிகழ்வுகளும், தோல்விகளும் எப்போது வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும் ஏற்படலாம். வாழ்க்கையே ஒரு குழப்பம் நிறைந்ததுதான் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

## பயம் தரும் விஷயத்தைப் பேசுங்கள்

உங்களது பயத்தை மற்றவரோடு பகிர்ந்து கொள்வது அதிலிருந்து விடுபடும் சுலபமான வழியாகும். உங்களால், உங்கள் உணர்வுகளை நெருங்கிய நண்பரிடமோ, உறவினரிடமோ மனம் விட்டுப் பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால், ஒரு மருத்துவரை அணுகலாம்.

## மகிழ்வான கற்பனை

கண்களை மூடிக்கொண்டு சிறிது நேரத்திற்கு தற்போதுள்ள சூழலை மறந்து, ஒரு அமைதியான பாதுகாப்பான சூழலைக் கற்பனை செய்யலாம். ஒரு அழகான கடற்கரையில் நீங்கள் நடப்பது போலவோ, அல்லது பூனைக்குட்டியை அணைத்துக்கொண்டு சுகமாக மெத்தையில் உறங்குவது போலவோ, சிறு வயதில் ஏற்பட்ட சந்தோஷ நிகழ்வுகளாகவோ இருக்கலாம். அது உங்களுக்குப் புத்துணர்வு அளித்து, நேர்மறையான ஊக்குவிக்கும் எண்ணங்களைத் தூண்டுவதாகவும், உங்கள் மனதிற்கு ஓய்வு அளிப்பதாகவும் இருக்கவேண்டும்.

## அடிப்படைக்குத் திரும்புங்கள்

பயத்திலிருந்து விடுபடும் வழியாகச் சிலர் போதை மருந்துகளையும், மதுவையும் தேர்ந்தெடுக்கின்றனர். ஆனால் அவ்வகையான தீயப் பழக்கங்கள், உங்களைக் குழப்பத்திலிருந்தும் பயத்திலிருந்தும் விடுவிப்பதற்கு பதிலாக மேலும் அதிகரிக்கச் செய்துவிடும். தினமும் நன்கு உறங்குவது, ஆரோக்கியமான உணவு, சிறிய நடைப் பயிற்சி ஆகியவை குழப்பங்களிலிருந்து நமது மனம் விடுபட பெரிதும் உதவுகின்றன.

## பிரார்த்தனையும் மஹாமந்திரமும்

மஹாமந்திரத்தோடு கூடிய பிரார்த்தனை உங்களை பயத்திலிருந்து விடுவிக்கும் மிகச் சிறந்த வழியாகும். தினசரி மஹாமந்திர ஜபம் செய்வது, உங்களைக் குழப்பங்களிலிருந்து தெளிவடையச் செய்வதோடு, நாளடைவில், அம்மாதிரி சூழ்நிலையே உங்களுக்கு வராமல் காக்கும். நாம் இறைவனின் செல்லக்குழந்தை, இறைவனின் பாதுகாப்பான அரவணைப்பிற்குள் வாழ்ந்து வரும் நம்மை யாரும் எதுவும் செய்துவிட முடியாது, என்ற எண்ணத்தை நமக்கு ஏற்படுத்தி நம்பிக்கையை உறுதிப்படுத்திவிடும்.

பண்டைய இந்திய நாகரீகமானது, வேறு எந்த சம காலத்து நாகரீகத்தைக் காட்டிலும் சமயம், சமுதாயத் தொடர்பு மற்றும் அறிவியல் & தொழில் நுட்பம் ஆகியவற்றிற்கு இடையிலான ஒருங்கிணைப்பில் தனித்தன்மையோடு சிறந்து விளங்கியது என்றால் அது மிகையாகாது. பண்டைய இந்திய நாகரீகமானது கணிதம், அறிவியல், விண்வெளி, உலோகவியல் மற்றும் பல துறைகளில் தன்னுடைய பங்களிப்பினை செய்திருகின்றது. குறிப்பாக வேதியியலில் அதனுடைய பங்கானது மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

எந்த ஒரு நாகரீகத்தினுடைய வேதியியலின் தொடக்கமானது, உலோகங்களை தங்கமாக மாற்றும் முயற்சியிலிருந்துதான் தொடங்குகின்றது. வேதியியல் (chemistry) என்கின்ற பெயரே 'அல்கெமி' (alchemy) என்கின்ற உலோகங்களைத் தங்கமாக மாற்றும் பொருள் கொண்ட சொல்லிலிருந்துதான் வந்தது. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்தியாவிலும் உலோகங்களை தங்கமாக்கும் முயற்சியில் ஈடுபட்டதன் பயனாக, மேலும் பல அறிய கண்டுபிடிப்புகளுக்கு அத்துறையில் அது வித்திட்டது. இந்த அறிவானது, பின் வந்த கல்வியாளர்களும் இயற்பியலாளர்களும் அந்த அறிவினை தங்கள் துறைகளில் பயன்படுத்திக் கொண்டனர். கி.மு. 1500ஆம் ஆண்டுகளில் வேதியியலானது இந்தியாவில் மிக வேகமான வளர்ச்சியினைக் கண்டது.

இந்தியாவில் வேதியியலானது 'ரச வித்யா' என்று அறியப்பட்டது. அதில், உலோகவியல், மருத்துவம், அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் ஆடை தயாரிப்பு ஆகியத்துறைகள் அடங்கும்.

ஸ்ரீ பாலாஜி ராமசந்திரன்

பகுதி 1

# இரசாயன மற்றும் வேதியியல் துறைகளில் பண்டைய இந்தியா



## பாரம்பரிய பொக்கிஷங்கள்

நிபுணர்களின் கூற்றுப்படி, இந்தியாவின் மிகப் பெரிய இதிஹாசங்களான இராமாயணத்திலும் மஹாபாரதத்திலும் குறிப்பிடும் போர்கருவிகள் பல, வேதியியலின் படைப்புகளே. பிராமணர்களின் போர் அறிவுதான் பின்னர் க்ஷத்திரியர்களுக்கு குருமுகமாக வழங்கப்பட்டது. 'குரு தன்னுடைய சீடர்களுக்கு உபதேசிக்கும் மந்திரமானது வேதியியலாகும்' என்று Argues Dey என்கின்ற ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். "அம்புகளின் முனையானது ஒருசில வேதியியல் இரசாயனங்கள் தடவப்பட்டிருந்தது. அவர்கள் அமிலங்கள், செம்பு, இரும்பு, ஈயம், வெள்ளியம், செம்பின் ஆக்சைடுகள், செம்பின் கந்தக பொருட்கள், இரும்பு மற்றும் ஈயத்தின் கார்போனேட்கள் ஆகியவற்றை தயாரிக்கத் தெரிந்து வைத்திருந்தனர்" என்று, எல்பின்சோன் (Elphinsone) என்ற பிரபல வரலாற்று ஆசிரியர் 'இந்தியாவின் வரலாறு' என்ற தன்னுடைய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'சரக சம்ஹிதா' என்கின்ற மருத்துவ நூலானது இரசாயன சாஸ்திரத்தை உள்ளடக்கியது. இந்த இரசாயன சாஸ்திரமனது, வேதியியல் மற்றும் அதன் பயிற்சிகளை விளக்குகின்றது. 'கௌடில்யர்' அருளிய 'அர்த்த சாஸ்த்திர'த்தில், உலோகத் தாதுக்கள் மற்றும் அவற்றை தூய்மைப்படுத்தும் முறைகள் விளக்கப்படிருக்கின்றது. மேலும், 'ரசரத்ன சமுசயா' என்கின்ற நூலானது வேதியியல் ஆய்வகங்களைப் பற்றி குறிப்பிடுகின்றது.

உலோகம், கண்ணாடி, அணிகலன்கள், மண்பாண்டம், சாயம் ஏற்றுதல், தோல் பதனிடுதல் ஆகிய துறைகளில் கலைநயம் மிக்க சாதனங்கள் செய்வதில் அக்காலத்தில் வேதியியலின் பங்கு மிக்கு இருந்தது. இத்துறைகளின் வளர்ச்சியானது, வேதியியலின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. அது எப்படி?

(தொடரும்)


Dr. Shriraam Mahadevan

MD (Int Med), DM (Endocrinology)

Consultant in Endocrinology and Diabetes, Regn No. 62256

ENDOCRINE AND SPECIALITY CLINIC

New 27/1, Old 11/1, (Gr. Floor),

4th Cross Street, RK Nagar,

Mandaveli, Chennai -600028

(Next to Krishnamachari Yogamandiram)

Tel: 2495 0090, Mob: 9445880090

E-mail: mshriraam@gmaill.com, www.chennaiendocrine.com

# சைதன்ய மஹாப்ரபு - 6

## சைதன்ய மஹாப்ரபு அவதாரம்



அத்வைதாச்சார்யாரின் அருள் வாக்கின் படியே சில நாட்களில் சசி மாதா கருவுற்றாள். அச்சமயத்தில் பகவான் க்ருஷ்ணரின் தாயார் தேவகிக்கு ஏற்பட்டதைப் போலவே, சசி மாதாவிற்கும் விசேஷ தெய்வீக அனுபவங்கள் ஏற்பட்டது. ஒரு சில நாட்கள், தேவர்கள் தன்மேல் பூ மாரி பொழிவதைக் கண்டாள்.



ஜகந்நாதமிஸ்ரர் மற்றும் பல வைஷ்ணவ அடியார்கள் சசி மாதாவின் கருவில் பகவான் குடி கொண்டு இருப்பதை உணர்ந்தார்கள்.










மாதங்கள் கழிந்தன .... ஒரு சமயம் ஹோலி பண்டிகை அன்று சந்திர கிரஹணம் வந்தது. ஆதலால் மக்கள் எல்லோரும் கங்கையில் நீராடினர். மற்றும் ஹோலி பண்டிகையும் கொண்டாடிக் கொண்டு நாலா புறமும் குதூகலமாக இருந்தனர்.





இப்படி குலியா நகரமே மகிழ்ச்சியாக இருக்கும் வேளையில் சசி மாதா ஒரு வேப்ப மரத்தடியில் அழகான ஆண் குழந்தையை பெற்று எடுத்தாள்.




சில நாட்களில் ஜகந்நாதமிஸ்ரர் தன் மகனுக்குப் பெயர் சூட்டும் விழாவை நடத்த ஏற்பாடு செய்தார்..




எல்லோரும் குழந்தை நிமாயியை லாலணை செய்து கொண்டிருந்த போதிலும் அவன் வீரிட்டு அழுது கொண்டே இருந்தான்..




அவர்களுக்கு நிமாயியை எவ்வாறு சமாதானம் செய்வது என்று அறியாமல் திக்கு முக்காடினர்...
அப்பொழுது அங்கு இருந்தவர்களில் ஒருவர் பகவன் நாமத்தைப் பாட ஆரம்பித்தார்.




நாமத்தை நிறுத்தியவுடன் குழந்தை மீண்டும் அழ ஆரம்பித்தான். அதைப் பார்த்த குலியா மக்கள் குழந்தையை மகிழ்விக்க, விடாமல் பகவன் நாமத்தைச் சொன்னார்கள்.

**பிறப்பில் இருந்தே தன் அவதார நோக்கம் "பகவன் நாமத்தை பரவச் செய்வது" என்று உலகத்திற்கு உணர்த்தினார்!**

**ஓவியர் : பாலமுரளி**

# ஸனாதன புதிர் – 92

## ஆத்ரேயன்

**கேள்விகள்**

1. கண்டு, வாக்ஷி இவர்கள் யார்? என்ன விசேஷம்?
2. ஹனுமாருடைய இருப்பிடம் எது? அது எங்கே இருக்கிறது?
3. கபாலி என்று யாரை கூறுகிறார்கள்?
4. ஸக்ரதனு என்பவர் யார்? இவர் யாருடைய புதல்வன்?
5. கபித்வஜன் என்பவர் யார்?
6. வசுஷேணன், வைகர்தன், விருஷன் இந்த பெயர்கள் யாரை குறிக்கின்றன?
7. கர்ணனின் புதல்வர்களின் பெயர் என்ன? பாரத போரில் இவர்கள் யாரால் கொல்லப்பட்டனர்?
8. ஏகசக்ர நகரத்தில் ஒருமாதம் பிராமணரது வீட்டில் இருந்த பாண்டவர்களை பாஞ்சால தேசம் செல்ல உத்திரவிட்டது யார்?
9. பாண்டவர்கள் பாஞ்சால தேசத்திற்கு செல்ல உயர்ந்த ஜாதி குதிரைகளை கொடுத்தது யார்?
10. பாண்டவர்கள் ஏக சக்ர நகரில் இருந்து கிளம்பி முதலில் யாரை சந்தித்தார்கள்? எந்த வேஷத்தில் யார் வீட்டில் இருந்தார்கள்?

**பதில்கள்**


1. கண்டு ஒரு மகரிஷி. இவரது புதல்வியின் பெயர் வாக்ஷி. இவர் பத்து பிரசேதஸ்களை மணம் முடித்தார்.
2. கதலி வனம். குபேர புஷ்கரிணிக்கரையில்.
3. இவர் பதினொரு ருத்திரர்களில் ஒருவர். ஸ்தாணுவின் புதல்வர். ப்ரும்மாவின் பேரன்.
4. கபில முனிவர்; தேவஹூதியின் புதல்வர்.
5. அர்ஜுனன்.
6. கர்ணன்.
7. பானுசேனன் - பீமன்; விருஷசேனன், சுஷேணன், உத்தமஜௌஜன் - அர்ஜுனன்; பிரசேனன் - சாத்யகி; சித்ரசேனன் - நகுலன்.
8. ஸ்ரீவியாசர்.
9. சித்ரரதன் என்ற கந்தர்வன்.
10. தௌம்யாசாரியாரை சந்தித்தார்கள். ப்ராம்மண ரூபத்தை வரித்து துருபதனுடைய நகரத்தில், கும்பகாரனுடைய வீட்டில் இருந்தார்கள்.

# புராநவா



**இந்த இடத்தின் பெயர் என்ன? எங்கு உள்ளது?**

**<u>சென்ற மாத புராநவா பதில்</u> — Sun Temple, Konark**

# படித்ததில் பிடித்தது

**செய்தித்தாள்களிலும் பத்திரிக்கைகளிலும் வந்த சுவாரஸ்யமான செய்திகளின் தொகுப்பு**

## An artist's rendition of Bhagavad Gita

Indian Express
8 January 2017



**டிசம்பர் 1ஆம் தேதி முதல், 'மோர்' என்ற கலைஞர், எட்டு கலைஞர்களுடன் குருக்ராமத்தின் குடியிருப்புப் பகுதி மற்றும் சாலையோரச் சுவர்களில், பகவத் கீதையை, விஞ்ஞானத்தையும் இந்திய பாரம்பரியத்தையும் இணைத்து ஒரு புத்தம் புதிய வடிவத்தில் ஓவியங்களாக்கும் முயற்சியை மேற்கொண்டார்.**

**"டிசம்பர் மாத ஆரம்பத்தில் வரும் கீதா ஜெயந்தி விழாக் கொண்டாட்டங்களின்போது, குருக்ராமத்தின் சுவர்கள் அனைத்திலும் பகவத் கீதையின் கதைகளை வரையவேண்டும் என்பதே எங்களுக்கிடப்பட்ட பணியாகும். பண்டைய காலக் கதைகளை அப்படியே வரைவதில் எனக்கு உடன்பாடு இல்லை. தற்போதைய தலைமுறையைக் கருத்தில் கொண்டு, அவர்களை ஈர்க்கும் விதமாக பல புதிய வடிவங்களையும் புகுத்தியுள்ளோம்" என்றார் குழுவின் தலைவர் மோர்.**

**முதலில், பகவத் கீதையிலிருந்து நேரடியாக ஆரம்பிக்கும் ஓவியங்கள், போகப்போக, கீதையின் கோட்பாடுகளைத் தற்காலத்திற்கேற்றவாறு விஞ்ஞான வளர்ச்சிகள், கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் பயன்படுத்தி வரையப்பட்டுள்ளன. ஒரு விண்வெளி வீரர் பூமராங்கைத் தூக்கி எறிந்தால் அது அவரிடமே திரும்பி வருவது போல் உள்ள ஓவியம் உள்ளது. அது நாம் செய்யும் கர்ம வினை நம்மிடமே திரும்பி வருகிறது என்ற பகவத் கீதையின் முக்கியக் கருத்தை விவரிக்கிறது.**

- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.


| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 07 பிப்ரவரி 2017 | ஏகாதசி |
| 08,09 பிப்ரவரி 2017 | வாநரஸிம்ஹ ஹனுமான் கோவில் கும்பாபிஷேகம், காங்கேயம் |
| 20 பிப்ரவரி 2017 | Kavacham Web Portal திறப்பு, நாரத கான சபா, சென்னை |
| 22 பிப்ரவரி 2017 | ஏகாதசி |
| 24 பிப்ரவரி 2017 | கன்யாகுமரி ஸ்ரீ ஜய ஹனுமான் பிரதிஷ்டா தினம் |
| 28 பிப்ரவரி — 2 மார்ச் 2017 | ப்ரேமிக வித்யா கேந்த்ரா ஆண்டு விழா, குருக்ராம் |

## அறிவிப்பு

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email:helpdesk@madhuramurali.org, Ph: "24895875"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No11, Door No 4/11, Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org



மதுரபுரி ஆஸ்ரமம்



மகர சங்கராந்தி, சென்னை, 14 Jan 2017

Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar